தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை-06
ந.க.எண். 000987/எம்1/இ1/2026, நாள். 15 .06.2026

பொருள் : பள்ளிக் கல்வி – தேசிய அளவிலான புகையிலை ஒழிப்பு சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் – மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல் –சார்பு.

பார்வை
1. From the joint Director, Department of School Education & Literacy, Ministry of Educational Government of India , Letter No. F.No.8-2/2024-KT.pace, Dated;24.04.2026.
2. Deputy Secretary to Government School Education Letter No.282/GL192)/2026-1 , Dated: 07.05.2026
3. Director of School Education , Directorate of School Education, Letter .R.C.No.016680/M1/S1/2026, Dated:22.05.2026.

-------

தமிழ்நாடு, பள்ளிக் கல்வி இயக்ககத்தின் தேசிய அளவிலான புகையிலை ஒழிப்பு சார்ந்த களஆய்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மத்திய அரசின் இணையவழி உரலி (link), http ://tofei.education.gov.in/ மூலம் அளிக்கப்பட உள்ளது.

எனவே, கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை 11.06.2026 முதல் 31.10.2026க்குள் முடித்து, பள்ளியின் UDISE எண்ணைப் பயன்படுத்தி மேற்காண் இணையவழி உரலி வாயிலாகப் புதிதாகப் பதிவுசெய்து, பதிவுஎண் மற்றும் கடவு எண்ணை (Password) உருவாக்கி இச்செயல்பாடுகளைப் பதிவேற்றம் செய்யவும், பள்ளிகளில் புகையிலைப் பொருள்கள் எதிர்ப்பிற்கான முன் ஏற்பாடுகள் குறித்தான களஆய்வில் மேற்காண் இணையவழி உரலி மூலம் கலந்துகொண்டு அனைத்துவகைப் பள்ளிகளின் தலைமையாசிரியர் / தாளாளர் / முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

**பள்ளி அளவிலான செயல்பாடுகள்:**

1. பள்ளியின் நுழைவுவாயில், படிக்கட்டு ஏறும் இடம், நூலகம், அறிவிப்புப்பலகை உள்ள இடங்களில் "புகையிலை தடைப்பகுதி" என்ற பதாகையினை அனைவரும் அறியும் வண்ணம் வைத்திடல் வேண்டும்.
2. பள்ளியின் நுழைவுவாயிலிலோ அல்லது சுற்றுச்சுவர்களின் வெளிப்புறத்திலோ "புகையிலைப் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ள கல்வி வளாகம்" என்ற பதாகைகளையும், அதில் இவ்வாளகத்தைச் சுற்றி 100மீ சுற்றளவு வரை புகையிலை விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அதை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் குறிப்பிடல் வேண்டும்.
3. பள்ளி வகுப்பறைகளிலோ, மைதானத்திலோ அல்லது பள்ளியின் வேறு பிற இடங்களிலோ புகையிலை மற்றும் அது சார்ந்த ஏதேனும் பொருள்கள் உள்ளனவா? என்பதைத் தலைமையாசிரிகள் தொடர் கண்காணிப்பில் வைத்திடல் வேண்டும், தேவை ஏற்படின், சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் உதவியுடன் விசாரணை மேற்கொண்டு காவல்துறையை அணுகுதல் வேண்டும்.
4. பள்ளி வளாகத்தில், பள்ளி மாணவர்களின் கைகளால் உருவாக்கப்பட்ட "புகையிலை எதிர்ப்பு விழப்புணர்வு" சார்ந்த ஓவியங்கள், கருத்துப்பட பதாகைகள், முழக்கங்களைக் காட்சிபடுத்துதல் வேண்டும்.
5. மாணவர்களிடையே புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வைப் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழி, பதாகை உருவாக்குதல் (Poster Competitions). பட்டிமன்றம், விழிப்புணர்வுப் பேரணி, நாடகம், வினாடிவினா போன்ற போட்டிகள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த சார்ந்த தலைமையாசிரியர்கள் நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டும்.

6. பள்ளிகளில் விருப்பமுள்ள ஆசிரியர் தலைமையில், மாணவர் குழு ஒன்றினை அமைத்து பள்ளிகளில் TOFEI Guidelines-2024இல் குறிப்பிட்டுள்ளபடி பள்ளிகளில் புகையிலை எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தேர்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து தலைமையாசிரியரிடம் தெரிவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்நடவடிக்கைக்காக, போதை எதிர்ப்பு மன்றத்தின் உறுப்பினர்களான மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் .

7. பள்ளி வளாகத்தைச் சுற்றி 100மீட்டர் சுற்றளவில் உள்ள பகுதியினைப் "புகையிலை பயன்பாடு தடை செய்யப்பட்ட பகுதி" என்பதைக் குறிக்கும்விதமாக அறிவிப்புப் பதாகை வைப்பதோடு மட்டுமல்லாமல் சாலையில் சிகப்பு வண்ணக்கோடுகள் மூலம் குறித்தல் வேண்டும்.

8. பள்ளி வளாகத்தைச் சுற்றி 100மீட்டர் சுற்றளவில் புகையிலை மற்றும் அது சார்ந்த பாக்கு, மிட்டாய், தூள், மாவு போன்ற தின்பண்டங்கள் வடிவிலோ, synthetic வடிவிலோ போதைப் பொருள்களின் விற்பனையைக் கண்டறியும் பட்சத்தில் சார்ந்த தலைமையாசிரியர், தங்கள் பகுதியில் உள்ள உள்ளாட்சி அலுவலர்களின் துணையுடன் அதனை உடனே அப்புறப்படுத்துதல், காவல்துறைக்குத் தகவல் தெரிவித்தல் போன்றவற்றை உறுதி செய்தல் வேண்டும்.

மேற்காண் செயல்பாடுகளை சார்ந்த வட்டார, மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குச் (தொடக்கக் கல்வி, இடைநிலை, தனியார் பள்ளிகள்) சுற்றிக்கையினை அனுப்பி, இச்செயல்பாடுகள் தொடர்ச்சியாகப் பள்ளிகளில் நடைபெறுவதை உறுதிசெய்து அறிக்கையினைப் பெற்று கோப்பாகப் பராமரித்திட சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்குத் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு**- புகையிலை ஒழிப்பு வழிகாட்டு நெறிமுறைகள் & இணையவழி பதிவேற்றத்திற்கான வழிகாட்டி.

21/3

இயக்குநர்.

சுதா
15.06.26

பெறுநர்

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்,

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை- 09 (தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது)
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால்துறை,
தலைமைச் செயலகம்,சென்னை-09 (தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது)
3. இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்ககம்,பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,சென்னை-06,
4. இயக்குநர்,
தனியார் பள்ளி இயக்ககம்,பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை-06,